உ
சிவமயம்

# சைவமும் தமிழும் வளர

அருந்தொண்டாற்றிய

அமரர்

# M. S. இராசரத்தினம் B. A.


நியாய துரந்தரர் அவர்களின்

26 8 72

# வாழ்க்கை வரலாறுச் சுருக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# M. S. Rasaratnam B. A.

(Advocate)

Born: 18th August 1884 — Died: 14th March 1957

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சைவமும் தமிழும்

தமது இரு கண்ணென

போற்றி வளர்த்தவரும்

பல பாடசாலைகளைத் தோற்றுவித்தவருமான

அமரர்

# M. S. இராசரத்தினம்

அவர்களின்

## வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

26 8 72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் மாவட்ட நீதிபதியான வழக்கறிஞர்

# வே. க. கந்தசாமி B. A. (Lond)

## அவர்கள் அளித்த ஆசிச் செய்தி

எங்கள் கிராமமாகிய வட்டுக் கோட்டையைச் சேர்ந்த அமரர் முருகேசு சின்னத்தம்பி இராசரத்தினம் அவர்களை 1920ம் ஆண்டில் முதன் முதலாக யான் யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவனாயிருக்கும் பொழுது, அறிவேன். அப்பொழுது அவர்கள் பி. ஏ. பட்டம் பெற்றதோடு, வழக்கறிஞருமாயிருந்தார். அப்பொழுது எங்கள் கிராமத்தில் யானறிந்தவரையில், இருவரே பட்டதாரிகளாயிருந்தார்கள்; ஒருவர் இராசரத்தினம் அவர்கள்; மற்றவர் சபாரத்தினசிங்கம் அவர்கள். ஆனால் யாழ்ப்பாணக் கல்லூரியில் பலர் பட்டதாரிகளாயிருந்தார்கள் அவர்கள் வெவ்வேறிடத்தைச் சேர்ந்தவர்கள். இராசரத்தினம் அவர்களும் வழக்கறிஞராகுமுன் யாழ்ப்பாணக் கல்லூரியில் சில காலம் ஆசிரியராக இருந்தாரென யான் அறிவேன்.

சில ஆண்டுகளுள் இராசரத்தினம் அவர்களுடன் யான் நன்றாக பழகுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவர்கள் வழக்கறிஞராய் தொழில் புரியுங் காலத்தில் சில பொது நலப் பணிகளில் ஈடு பட்டிருந்தார்கள். அப்பணிகளில் முக்கியத்துவம் பெற்றபணி யாதெனில் சைவ சமயத்தைச் சேர்ந்த பிள்ளைகள் சைவச் சூழ்நிலையில் உருவாகிய சைவவித்தியாசாலைகளிலேயே கல்விகற்க வேண்டுமென்ற கொள்கையை மேற்கொண்டு சைவ வித்தியாசாலைகளை நிறுவிய தேயாகும்.

ஆங்கில அரசாட்சி நிலவிய காலத்தில் இந் நாட்டிலே அதிகமான கல்லூரிகளும், வித்தியா சாலைகளும் கிறீஸ்தவ மதத்தினரால் நடாத்தப் பட்டமையாலும், அவைகளில் கல்வி கற்பவர்கள் கிறீஸ்தவ மதபோதனைக்குட்பட்டமையாலும், சிலரோ, பலரோ, தமது மதத்திலிருந்து கிறீஸ்தவ மதத்தை சேரநேர்ந்தது. இதனையுணர்ந்த நல்லைநகர் ஆறுமுகநாவலர் அவர்கள். வண்ணார்பண்ணையில் தாமே சைவப் பிரகாச வித்தியா சாலையை அமைத்தும், வேறுசில கிராமங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசாலைகளை அமைக்கச் செய்தார்கள். நாவலர் அவர்களின் கருத்தின் வித்தானது விளைந்து, அதன் பயனாக 1922ம் ஆண்டளவில் சைவவித்தியா விருத்திச் சங்கம் அமைக்கப்பெற்று, அச்சங்கம் பல இடங்களிலும், பல சைவ வித்தியாசாலைகளை அமைத்து செயலாற்றியது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதல் தலைவர் ஈழத்தின் தலைவர்களுள் ஒருவரும், தமிழ் மக்கள் தலைவருமாகிய சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள். அக்காலத்தில் இராசரத்தினம் அவர்கள் அச்சங்கத்தின் செயலாளராக சிலகாலம் பணி புரிந்தார்.

எங்கள் கிராம மத்தியில் ஒரு வித்தியாசாலை நிறுவ வேண்டுமென, இராசரத்தினம் அவர்கள் அயராது உழைத்து 1926ம் ஆண்டில் திருஞானசம்பந்த வித்தியாசாலை நிறுவினர்கள் தூண்கள் நாட்டி வளைவைக்கும் சமயத்தில் பலர் கூடி நின்றனர். அவர்களுள்யானும் ஒருவன். சிவன்கோவிலடியில் திருநாவுக்கரசு வித்தியாசாலை நிறுவுவதற்கும் பணி புரிந்தார்.

சைவ உணர்ச்சியும், ஆர்வமும் நிரம்பிய பெரியார் இராசரத்தினம் அவர்கள், தமது தொழிலையும் பொருட்படுத்தாது, பொது நலம் பேணும் தகைமையாளராக விளங்கினர். எங்கள் கிராமத்துப் பெருமக்களுள் பெருமகனான, இராசரத்தினம் அவர்களின் அரும் பணியின் பயனாக நிறுவப்பெற்றதும், எங்கள் முதலாம் சமய குரவரின் திருப்பெயரைப் பெற்றுதுமாகிய, திருஞானசம்பந்த வித்தியாசாலை, அணையா விளக்காய் விளங்கி, அறிவொளி பரப்பும் என்பதற்கு யாதுமையுற வில்லை.

அமரர் மு. சி. இராசரத்தினம் அவர்கள்
நினைவு என்றும் நிலவுக.

வே. க. கந்தசாமி (B. A, Lond)
வழக்கறிஞர்;
முன்னாள் மாவட்ட நீதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் மூதவை உறுப்பினர்

## S. R. கனகநாயகம் (EX,SENATTOR) அவர்கள்

## மனமுவந்து அளித்த ஆசி உரை

(ஶ்ரீலஶ்ரீ) சிறில சிறி ஆறுமுக நாவலர் விதைத்த சைவ சமய உணர்வைத் தொடர்ந்து சைவ வித்தியா விருத்திச் சபையின் செயலாளராக இருந்த திரு M. S. இராசரெட்டினம் B. A. அப்புக்காத்து அவர்கள் 1920-ம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாண சைவவிருத்திக்கும் சைவமாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அரும் தொண்டாற்றிய ஒருவராகத் திகழ்ந் தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் அன்னுட்களின் சமூகப் பிரமுகர்களான சேர், பொன் அருணுசலம், சேர். வைத்திலிங்கம், திரு அருணுசலம் மக தேவா, திரு S. இராசரட்டினம் ஆகியோரை தம்மோடு ஒருங் கிணைத்து இந்தச் சாதனைகளை செய்து முடித்தார்.

திரு. M. S. இராசரெட்டினம் அவர்களிடம் கூரிய பார் வையும் தெளிவான சிந்தனையும் என்றும் உண்டு. அவர் பண் டைய தமிழர் நாகரிகம், சரித்திரம், சைவ சித்தாந்தம் ஆகிய வற்றில் ஆழ்ந்த புலமைமிக்க வராகத் திகழ்ந்தவராவர்.

ஒரு திறமைமிக்க வழக்கறிஞராக இருந்தபோதிலும், தனது தொழிலில் அதிகம் கவனம் எடுக்காமல் தாம் எடுத்த பணியை செய்துமுடிப்பதில் தனது நேரத்தையும் காலத்தை யும் முழுதாக செலவிட்ட ஒரு பெருமகன் M. S. இராசரெட் டினம் அவர்கள்.

தமிழ் மூவேந்தர்களின் புலி, வில், கயல் பொறித்த கொடியை ஒரு பொங்கல் தினத்தில் யாழ் முற்ற வெளியில் ஏற்றி வைத்து உரை நிகழ்த்தி தமிழரின் தன்மான உணர் வுக்கு அன்றே வித்திட்டு வைத்தவர் இவர்.

இவரது பெயரும் புகழும் வட்டுக்கோட்டையில் மட்டு மல்ல யாழ்ப்பாணம் முழுவதுமே இன்று பேசப்படுகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய நாம் அனைவரும் பிராத்திக்கவேண்டும்.

**S. R. கனகநாயகம்**
(நியாயதுரந்தரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைப்பாறிய உயர் நீதிமன்ற
# முதலியார்: எஸ். சின்னத்தம்பி
## அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

அந்நியர் ஆட்சியின் விளைவாக, இந்த நாட்டிலே அந்நிய மத ஆதிக்கம் தலைதூக்கி நின்றது. தொன்மைப் பெருநெறியாகிய எங்கள் சைவநெறி குன்றித் தாழ்வுற்று, மங்கி மறையவும் தொடங்கியது.

அந்த வேளையில், நாவலர் பெருமான் தோன்றியதும், அந்நிய மத ஆதிக்கத்தை உடைக்க முற்பட்டதும், மக்கள் உள்ளங்களிலே சைவநெறி உணர்ச்சியைத் சுவாலையுற ஊட்டியதும், நாட்டிலே மகத்தான விளிப்புணர்வும் புரட்சிவேகமும் ஊற்றெடுத்துப் பொங்கியதுவுமெல்லாம் ஈழம் கண்ட புனிதப் புகழ்வரலாறேயாகும்.

நாவலர் பெருமான் தூவிய சைவ வீர உணர்வாம் நல்வித்தை நாடு முழுதும் பரந்து செழித்த ஒரு மறுமலர்ச்சி இயக்கமாக வளர்த்தெடுத்த— இந்த நாட்டில் ஆக்கத்துறையில் ஒரு புது வரலாற்றையே படைத்து வெற்றிகண்ட பெரும்பணி, Hindu Board of Education என்றழைக்கப் பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் அரிய சாதனையாகும்.

இந்த மாபெரும் மறுமலர்ச்சி இயக்கத்தை உருவாக்கி நடாத்திய இப்பெரும் நிறுவனத்தின் ஆதிவீரர்களின் முன்னணியில் தலைமை சான்றவராய் மிளிர்ந்து. மட்டற்ற பாராட்டிற்குரியவராய்த் திகழ்ந்தவர், வட்டு நகரின் தவப்பெரும் புதல்வராய M. S. இராசரத்தினம் என்பதை உலகு அறியும்.

பெரிய தியாகங்களின்றிப் பெரிய காரியங்கள் எதையும் செய்து முடிக்க இயலாது என்பதை உணர்ந்த எங்கள் M. S. இராசரத்தினம் அவர்கள் ஒருவரே, அந்த நாட்களில் தனது வழக்கறிஞர் தொழிலையும் துறந்து, சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முழுநேர ஊழியராக விளங்கினார்

நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் சைவப் பாடசாலைகள் நிறுவிச், சைவ சமயத்தை மலரவைக்கவேண்டும் என்ற சங்கத்தின் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தியவரும் எங்கள் இராசரத்தினம் அவர்களே யாகும். அவருடைய மகத்தான உழைப்பின் விளைவாகவல்லவா எங்கள் ஊரிலும் திருஞானசம்பந்த வித்தியாசாலை தோன்றியது!

இந்தத் திருஞானசம்பந்த வித்தியாசாலையைக் கட்டிமுடிக்க அவர் உழைத்த அயரா உழைப்பை, அவருக்கு அந்நாளில் பக்கதுணையாய் நின்றவரில், இன்றுமுளராய சிலர் நன்கு அறிவர்.

'உலகறிந்த மிகப்பெரிய கல்லூரி ஒன்று எங்கள் ஊரில் இருக்கின்றது; ஆகவே ஏன் எங்களுக்கு வேறு பள்ளி' என்று எண்ணிய வரையெல்லாம் எதிர்த்து வேகமாகச்சாடி, எங்கள் மத்தியில் இவ் அரிய சைவபாடசாலையை உருவாக்கித்தந்த பெருமையும் அழியாப் புகழும் இராசரத்தினத்தாருக்கே உரியன.

'இத்துணைப் பெருமைவாய்ந்த ஒரு தேசத்தொண்டரை மறந்துவிட்டோம், அன்னாரின் ஞாபகார்த்தமாக எதையும் செய்தோமில்லையே' என்று நீண்டகாலமாக நம்மவரிற் பலர் கவலைப்பட்டு வந்திருக்கின்றனர். ஆகக் குறைந்த அளவிலாகுதல் ஒரு ஞாபகார்த்தம் செய்தல் வேண்டும் என்ற உணர்வு இன்று பல அன்பர்கள் மனதில் உதயமாகி இருக்கின்றது.

இவருடைய உருவப்படத்தை திருஞானசம்பந்த வித்தியாசாலையில் ஒளிரவைப்பதோடு, இந்த வித்தியாசாலை மூலம் எங்கள் ஊர்க் குழந்தைகளுடைய உள்ளங்களில் சைவ ஒளி மலர வைத்த இவர் நினைவாக இப் பாடசாலைக்கு **மின்னொளி (Electricity)** அமைப்பதுவுமே இப்பொழுது எழுந்துள்ள ஞாபகார்த்தத் திட்டம் அமுலுக்கு கொண்டுவர இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க அவர் புகழ்

**முதலியார்: எஸ். சின்னத்தம்பி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வைதீஸ்வர வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர்

## ச. அம்பிகைபாகன், B. A.

அவர்கள் அளித்த ஆசிச்செய்தி

நாவலர் அவர்களுக்குப் பின்பு சைவப் பிள்ளைகளின் கல்விக்குப் பலர் அருந்தொண்டாற்றியிருக்கிறார்கள். அவர்களில் எஸ். இராசரத்தினம் அவர்களும், எம். எஸ். இராசரத்தினம் அவர்களும் தலைசிறந்து விளங்குகிறார்கள். எஸ். இராசரத்தினம் அவர்களை உற்சவ மூர்த்திக்கும், எம். எஸ். இராசரத்தினம் அவர்களை மூலமூர்த்திக்கும் ஒப்பிடலாம். மூலமூர்த்தியிடமிருந்தே உற்சவமூர்த்தி தனது சக்தியைப் பெறுகின்றதென்பது சொல்லாமலே விளங்கும்.

எம். எஸ். இராசரத்தினம் அவர்கள் அந்நிய மதத்தினர் சூழ்ச்சிகளை எல்லாம் நாவுக்கரசரைப் போல் சிலகாலம் உள்ளிருந்து அறிந்தவர். கிறிஸ்தவ பாடசாலைகள் மூலம் சைவப் பிள்ளைகள் மதம் மாற்றப்படுவதை தமது சொந்த அனுபவம் மூலம் நன்கு அறிந்திருந்தார். ஆகவே சைவப் பிள்ளைகளுக்குச் சைவப்பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்பதைத் தனது வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டிருந்தார்.

இக் கொள்கையை நிறைவேற்றும் பொருட்டே சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் வைத்தியலிங்கம் துரைசாமி, எஸ். இராசரத்தினம் முதலியவர்களுடன் சேர்ந்து சைவ வித்தியா விருத்திச் சங்கத்தைத் தாபித்தார். கிறிஸ்தவபாடசாலைகளுக்கருகில் சைவப் பாடசாலைகளைத் தாபிப்பதற்கு தடையாய் இருந்த சட்டத்தை (2 மைல் சட்டம்) நீக்குவதற்கு அரும்பாடு பட்டு உழைத்து அதில் வெற்றி பெற்றார். இச்சட்டம் நீக்கப்பட்ட பின்பே சைவ வித்தியா விருத்திச் சங்கம் கிராமங்கள் தோறும் பல சைவப் பாடசாலைகளைத் தொடங்கக் கூடியதாக இருந்தது.

இவர்கள் கல்வித்துறையோடு சிலகாலம் அரசியல் துறையிலும் சேவை புரிந்தார்கள். யாழ்ப்பாணச் சங்கத்தில் முக்கிய அங்கத்தவராக இருந்தார். மூவேந்தர்களின் இலட்சியங்களைக் கொண்ட கொடியையேற்றி தமிழ்த் தினத்தைத் தமிழ் வருடப் பிறப்பன்று கொண்டாடி வந்தார்.

இந்துசாதனப்பத்திரிகைக்கு சில ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். இத்தகைய தொண்டரின் சேவைகளைப் பாராட்டி அவர் தாபித்த வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் விழா எடுப்பது சாலப்பொருத்தமானது.

யாழ்-வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாலய முன்னாள் அதிபர்

## க. சுப்ரமணியம்

அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

வட்டுமா நகரிலுள்ள திரு. சின்னத்தம்பியாரும்,அன்னம்மாவும் பல்லாண்டு காலமாகச் செய்த தவத்தின் பயனாகத் தோன்றியவர் நம் பெரியார் திரு. இராசரத்தினம் அவர்கள். இவர் சிறுவயதிலேயே ஈழைத் தேசத்திலே முதன் முதலாகத் தாபிக்கப்பட்ட ஆங்கிலக் கல்லூரியாகிய, வட்டு/யாழ்ப்பாண கல்லூரியில் ஆங்கில மொழியையும், பல அறிவு நூல்களையும் கற்று பி.ஏ. தேர்வில் மிகத் திறமையுடன் சித்திபெற்றார்.

சட்டக் கலை கற்றுத் தேர்ந்த பின் நியாயவாதியாக யாழ்ப்பாணம், மல்லாகம், ஊர்காவற்றுறை ஆதிய இடங்களிற் கடமை புரிந்தார். இத் தொழில் கூட இவரின் தாகத்தைத் தணிய இடம் கொடுக்கவில்லை. சைவப்பிள்ளைகள் சைவப்பாடசாலைகளிற் சைவ முறையில் கல்வி கற்க வேண்டுமெனப் பெரும்பித்துக் கொண்டார். இதனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடன் கடமையாற்றும் ஏனைய நியாயவாதிகளுக்கும் எடுத்துரைத்தார். இதன் பெரும் பயனாக இவ ராலும் திருவாளர் சு. இராசரத்தினம், சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். டபிள்யூ, துரைச்சுவாமி ஆகிய பெரியோர்களாலும் சைவவித்தியா விருத்திச்சங்கம் நிறுவப்பட்டது. இச் சங்கத்தின் செயலாளராக இவரே நீண்ட காலம் கடமையாற்றி யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சைவப் பாடசாலைகளை நிறுவுவதற்குக் காரண கர்த்தா வாகவிருந்தார்.

பல பாகங்களிற் சைவப் பாடசாலைகளை நிறுவியும், இவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. தமது கிராமமாகிய வட்டுக் கோட்டையில் இவர் முன்னோர் சைவப்பாடசாலைகளைத் தொடங்கி நடத்த முடியாது விட்டதைக் கண்டு மனங்கவன்றார்.

அந்தக்கவலையின் காரணமாக தனது சொந்த முயற்சியின் பயனாக வட்டுக்கோட்டையில் திருஞானசம்பந்தர் வித்தியாலயம், திருநாவுக்கரசர் வித்தியாலவம் ஆகிய இரண்டையும் அமைத்து அதன் வளர்ச்சிக்கு அரும் தொண்டாற்றினார்.

பாடசாலைகளை உதவி நன்கொடை பெறாது நடாத்துவது முடியாத காரியம் என அறிந்தார் இக்காரணம் கொண்டு அரசியலில் ஈடுபட்ட சைவப் பெருமகனார் சேர். வைத்தியலிங்கம் துரைச்சுவாமிஅவர்களை இத்தொகுதியின் சட்டசபை பிரதிநிதியாக அனுப்பி சைவப் பாடசாலைகளை வளர்க்க இவர் மூலம் அரசாங்க உதவியைப் பெற்றார். வட்டுக்கோட்டையில் இப்பாடசாலையை நிறுவியதுடன் வேகம் தணியவில்லை. வட்டு. சிவன் கோயில் வீதியில் திருநாவுக்கரசு வித்தியாசாலையை நிறுவினார். இப்பாடசாலைக்குச் சேர் பொன்னம்பலம் இராமநாதனை அழைத்துக் கௌரவித்துச் சிறந்த சொற்பொழிவாற்றுவித்தார்.

வட்டுக்கோட்டை முருக மூர்த்தி கோவிலில் அக்காலத்தில் மாதா மாதம் கார்த்திகைத் திருவிழாக்களே நடத்தப்பட்டு வந்தன. 1906ல் கொடியேற்று விழா எடுக்க ஆரம்பித்தனர்; அதனால் கோவிலின் தென்மேற்கு மூலையில் அமைந்திருந்த கேணி தேர் ஓட்டத்திற்கு இடங்கொடாதிருந்தமையால் அது மூடப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவே இவர் தாமாக முன்வந்து கோவிலுக்குத் தெற்கே ஒரு கேணியை வெட்டுவித்து அங்கு வரும் அடியார்கள் குளிக்க; கைகால் கழுவக்கூடியதாக அமைப்பித்துவைத்தார்.

செல்லப்பா சுவாமிகளின் திருத்தொண்டராகிய யோகர் சுவாமிகளின் பெரிய தொண்டர் இவர். இவர் எக்காரியத்தைச் செய்யுமுன்பும் யோகர் சுவாமியைச் சென்று ஆசி பெற்ற பின்னரே அக்காரியத்தைச் செய்வார், இத்தகைய தன்னலங்கருதாப் பல நலன் கருதிக் கருமமாற்றிய பெருந்தகை தம் இறுதிக்காலத்தை யோகர் சுவாமிகளின் கட்டளைப்படி அமைதியாகத் தமது இல்லத்திலேயே இருந்து கொண்டு சிவத்தியானத்தில் ஈடுபட்டு இறைவன் திருவடியை அடைந்து அமரரானார்,

சைவ வித்தியா விருத்திச்சபை அமைத்து ஈழத்து இந்து சமய வளர்ச்சியில் அரும் பெரும் சாதனைகள் பல கண்ட அமரர் எம். எஸ். இராசரத்தினம் நியாயவாதி அவர்களின் மகத்தான சேவையை நினைவுகூருவோமாக.

வணக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாலய
## அதிபர்: திரு. க சச்சிதானந்தம்
### அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

எமது மதிப்பிற்குறிய நியாயவாதி M. S. இராசரத்தினம் அவர்கள், அவர் தமிழ்த்தாயின் தவப்புதல்வர் ஆவர் தமிழும் சைவமும் எவ்வாறு ஒன்றை ஒன்று பிரிக்கமுடியாதோ, அவ்வாறு இந்த இரண்டிலிருந்தும் திரு. எம். எஸ். அவர்களை எக்காலமும், எவராலும் பிரிக்கமுடியவில்லை. இவரின் பேச்சும், மூச்சும், நடையும், உடையும், தமிழின் சைவத்தின் பிரதி பலிப்பாக இருந்தது.

இவரது நடை எவ்வளவு வேகம் நிறைந்ததோ, அவ்வளவு வேகம் இவரது பேச்சிலும் இருந்தது. தெளிவு நிறைந்த இத்தகைய தீவிர வேகம், ஆற்றல், பணிபுரியும் தன்மை எல்லாம் நிறைந்த பெருமகன் இப்பெரியார்.

அக்காலத்தில் ஒலிபெருக்கி வசதி எதுவும் கிடையாத சூழ்நிலையில், எள் போட்டால் எள் விழமுடியா ஜனக்கூட்டத்தில், அத்தனை மக்களும், தெளிவாகக் கேட்கக்கூடிய முறையில் சமயப் பிரசங்கங்கள் செய்த திறமை மிக்க ஒருவராகும்.

யாழ்ப்பாண முழுமையும் ஏன் இலங்கை ஏனைய பாகங்களிலும், நாவலருக்குப்பின் சைவமும், தமிழும், தழைத்தோங்க வழிகோளிய ஒரு உன்னத மனிதர் இவராகும்.

இவர் நினைவாக, வெளிவரும், அவரது வாழ்க்கை வரலாற்று நூலில் எனது செய்தியையும் சேர்த்து, அளிப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

வாழ்க அவர் நாமம்! வளர்க அவர் சேவை!!

க. சச்சிதானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

இது ஒரு சாதாரண மனிதனின்கதையல்ல. ஈழத்திருநாட்டில் சைவத்தையும், தமிழையும் நினைக்கின்ற உள்ளங்கள் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகு பிறந்தாலும், அன்று வாழும் சைவ சிந்தனைக்கு வித்திட்ட ஒரு பெருமகனின் வீரக் காவியம் இது.

உள்ளத்தால், உணர்வால், உடலால் தன்னைப் பூரணமாகப் பொதுத் தொண்டுக்கு அர்ப்பணித்து அப்பணியிலேயே தன்னை முழுமை யாக்கிக்கொண்ட ஒருவரின் உணர்ச்சிக் காவியம் இது.

காலம் கடந்தபின்தான் எதையுமே சிந்தித்து பழகிப் போன ஈழத்தமிழினம், இன்றுதான் அவரது நினைவுத் துளிகளை இன்றைய சந்ததிக்கு தெளிக்க முன் வருகின்றது போலும், காலம் கடந்துபோன ஒன்று என்றாலும் எக்காலத்திலும் கண்ணியப் படுத்தவேண்டிய ஒரு செயலாகும். பனைவளமும் மக்கள் மனவளமும், நிறைந்து ஈழத்தமிழினத்தின் இதயக் கோவிலாக விளங்கும் யாழ்ப்பாண திருநாட்டில் அவதரித்து அருந் தொண்டாற்றிய பெருமகன் M. S. இராசரத்தினம் நியாயதுரந்திரரின் கதைதான் இது. M. S. என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டு வந்த இவர்தான் திரு M. S. இராசரத்தினம் அவர்கள்.

1884-ம் ஆண்டு ஆவணி மாதம் 18-ம் திகதி முருகேசு சின்னதம்பி என்னும் ஆசிரியருக்கும், அன்னம்மா சின்னத்தம்பிக்கும் ஏக புதல்வனாய் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் அவதரித்தார். அவர் அவதரித்த நன்னாள் ஈழத்தமிழருக்கும் சைவத்திற்கும் பொன்னாளாகும். அவர் 1912-ம் ஆண்டில் வட்டுக்கோட்டை சின்னத்தம்பியா பிள்ளையின் இளையமகளான லோகாம்பாள் என்பவரை மணம் புரிந்து தனது இனிய இல்வாழ்வை தொடங்கினார். கல்கத்தா பல்கலைக் கழக பட்டதாரி பரிட்சையில் தேறி ஒரு கலைமானியாக (B A) 1905-ம் ஆண்டு வெளியேறிய இப்பெருமகன் 1906-ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியனாக சேர்ந்தார்.

ஆங்கில ஏகாதிபத்தியமும் கிருஸ்தவ மத ஆதிக்கமும் வெகுவாக ஆட் கொண்டிருந்த காலமிது. மதம் மாறி இனம் மாறி கிறிஸ்தவ கல்லூரிகளில் சேர்ந்து நமது கலாச்சாரப் பண்பாடுகளை குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியில் நம்முள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் தோன்றியிருந்த காலமும் அதுதான். அந்த நேரத்தில் ஓர் ஆசிரியனுக இருந்த திரு இராசரத்தினம் அவர்களது உள்ளத்தில் பல போராட்டங்கள் நிகழ்ந்தன.

தமிழ்க் கலேயும், தமிழ் விரமும், சைவ உணர்வும் சைவ இலக்கியங்களும் பூத்துக் குலுங்கிய பூந்தோட்டமெனக்கிடந்த உள்ள மல்லவா திரு. இராசரத்தினம் அவர்களின் உள்ளம். அன்றே சிந்தித்தார், ஒரு கட்டுப்பாட்டுக்குள் தன்னே இருத்திக் கொண்டு தனது இலட்சியப் பயணத்தை தொடர முடியாது என்பதை நினேத்து செயல்படத் தொடங்கினுர். அதன் விளேவு தான் அவர் சட்டப்படிப்பை தொடங்கக் காரணமாக விருந்தது.

குட்டையான தோற்றமும் மெலிவான உடலும் கொண்டவராக இருந்தாலும் உள உறுதியும் தெளிவான சிந்தனேயும் உள்ளவராக இருந்தபடியால் அவர் தொட்டதெல்லாம் துலங்கிற்று. அவர் கை பட்டதெல்லாம் பசும் பொன் போல் பிரகாச மாயிற்று. சட்டப்படிப்பை தொடங்கி ஒரு சட்ட வல்லுனராக 1911ம் ஆண்டு வெளியேறினுர். அதன் இடைக் காலத்தில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும், பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியிலும், விரிவுரை யாளராக பணியாற்றியதன் மூலம் இந்தக் கல்லூரிகள் அவரது மகத்தான சேவையைப் பெற்றுக் கொண்டது. 1911ம் ஆண்டு ஆசிரியப் பணியைத் துறந்து யாழ்ப்பாண வழக்கறிஞர் சபையில் (Bar) சேர்ந்ததுடன், தனது மிகப் பெரிய சாதனேமிக்க பொதுப் பணியில் முதல் மைல் கல்லே ஆரம்பித்து வைத்தார்.

ஒரு வழக்கறிஞராக தனது தொழிலே ஆரம்பித்த திரு. எம். எஸ். அவர்கள் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம், ஆகிய நீதிஸ்தலங்களில் தனது தொழிலே சிறப்புற நடத்தி வந்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறப்பு மிக்க நாவன்மை படைத்திருந்த காரணத்தால் அந்தக் காலத்தில் சட்டத்துறையில் கீர்த்தியும் புகழும் கொண்டவராகத் திகழ்ந்தார்.

தேடி சோறு தினம் தின்று பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி
வாடித் துன்பம் பல செயல் புரிந்து
கூடிக் கிழப் பருவம் எய்தி — கொடும்
கூற்றுக்கு இரையென பின் மாளும்
வேடிக்கை மனிதன் என வீழ்வேன்என நினேத்தாயோ!

என்ற பாரதியின் கருத்துக்கு இலக்காக வாழ்ந்து தன் காலத்தை வாழ்வை, மகத்தான பணியில் முடித்த ஒருவரின் சரிதம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேர் பொன் இராமநாதன் சேர் பொன் அருணாசலம்

ஈழத் திருநாட்டின் அகராதியில் அழிக்க முடியாத சரித்திர நாயகர்களும், ஈழத்தின் சுதந்திரத்தை ஈட்டிக் கொடுத்த மூத்த தலைவர்களுமான, சேர் பொன் இராமநாதன் சேர் பொன் அருணாசலம் ஆகியோர்களுடன் தோளோடு தோள் நின்று கையோடு கைசேர்த்து பணிபுரிந்து ஈழத்தின் சைவமத அபிவிருத்திக்கு அரும் பணியாற்றிய பெருமையும் திரு M. S இராசரத்தினம் அவர்களுக்கு உண்டு. அவர் மட்டும் நினைத்திருந்தால் இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் இன்றைய தலைவர்களை விட சிறப்பான ஒரு இடத்தை எடுத்திருக்கலாம். ஆனால் இவரது சுயநலமில்லாத பண்பும் புகழ் விரும்பாத குணமும் இவரது பெருந்தன்மையாக இருந்ததினால் இவரது பெயர் பிற்காலத்தில் எழும்பாமல் போய்விட்டது.

## சைவ வித்தியாவிருத்திச் சபை
## (Hindu Board of Education)

1923-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சகல பாடசாலைகளும் கிறிஸ்தவ மிஷனரியின் கைக்குட்பட்டிருந்த காரணத்தால் வளரும் சிறுர்களின் மத்தியில் சைவ மத உணர்வும் தமிழ் மொழிப் பற்றும் வெகுவாக நெரிபட்டு, நசுக்கப்பட்டு வந்த நிலைகண்டு திரு. M. S அவர்கள் வெகுவாக மனம் வேதனைப்பட்டார். அதைப்பற்றி ஆழமாக யோசித்தார். சைவமத அபிவிருத்திக்காக ஒரு தனியமைப்பை ஏற்படுத்த வேண்டுமென நினைத்தார். அதன் விளைவாக அன்றைய சட்டசபை அங்கத்தவராக இருந்து, பின் சபாநாயகரான சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்களிடம் ஆலோசனை நடத்தினர். அதன் விளைவாக சைவ வித்தியாவிருத்திச் சங்கம் (Hindu Board of Education) ஆரம்பிக்கப்பட்டது. அந்த சங்க ஆரம்ப கூட்டத்திற்கு அந்நாளின் பிரபல்யம் வாய்ந்த பிரமுகர்களான சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம், திரு. அருணாசலம் மகதேவா, சேர் அம்பலவாணர் கனகசபை, திரு. S. இராஜரட்டினம் ஆகிய பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

## சேர்த்து வைத்தவர்

குறிப்பான பொது வைபவங்களைவிட மற்றைய தனி நிகழ்ச்சிகளில் சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் ஆகிய இரு சகோதரர்களும் ஒன்ருக்க் கலந்துகொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கு ஒருவர் அவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். சைவ வித்தியா விருத்திச் சங்க ஆரம்ப கூட்டத்தை ஒழுங்குபண்ணிய திரு. M. S. இராசரத்தினம் அவர்கள் இருவரையுமே கூட்டத்திற்கு அழைத்திருந்தார். கூட்டத்திற்கு முதலில் திரு. அருணாசலம் அவர்கள் வந்துவிட்டார். சரியான நேரத்திற்கு சேர் பொன் இராமநாதனின் கார் வருவதைக் கண்ட இளைஞரான திரு. மகாதேவா அவர்கள் புறப்பட்டபொழுது அவருடைய தந்தையான சேர் அருணாசலம் அவர்கள் அவரைத் தடுத்து '' நீ போனால் அவர் வரமாட்டார். திரு. M. S. இராசரத்தினம் போகட்டும் '' என்றார்: இதிலிருந்து அன்றைய அரசியல் சமுக பிரமுகர்கள் மத்தியில் திரு. M. S. இராசரத்தினம் அவர்களின் செல்வாக்கு எப்படிப்பட்டது என்பது தெளிவாகின்றது. தனி நிகழ்ச்சிகளில் ஒருவரை ஒருவர் சந்திக்காத இரு சகோதரர்களையும் ஒன்றிணைத்து இந்து சைவ வித்தியா விருத்தி சபையை ஆரம்பித்து வைத்தவர் திரு. M. S. இராசரத்தினம் அவர்கள்.

## சட்டத்தில் மாற்றம்

சைவ வித்தியா விருத்திச் சபை ஆரம்பித்து, தனது முதல் பணியாக மாதகலில் ஒரு பாடசாலை அமைத்து அதைப் பொறுப்பேற்க முற்பட்டபொழுது, ஒரு பெரிய சிக்கல் திரு. M. S. இராசரத்தினத்தை எதிர்நோக்கியது. இச்சபையின் தலைவராக சேர் P. இராமநாதன் இருந்தபோதிலும், இதன் ஸ்தாபகராகவும் செயலாளராகவும் திரு. இராசரத்தினம் அவர்கள் இருந்ததினால் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கி சமாளிக்க வேண்டிய பெரும் பொறுப்பும் அவருக்கே வந்தது.

இயங்கும் பள்ளிக்கூடங்களில் இருந்து 2 மைல் சுற்று வட்டாரத்திற்குள் அமைக்கப்படும் எந்தப் பாடசாலையையும் அரசாங்கம் கையேற்பதில்லை என்ற சட்டம் அப்போது வெகுவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருந்த காலம் அது. சைவ வித்தியா விருத்திச் சபையின் முதல் முயற்சியில் ஏற்பட்ட தடங்கல் கண்டு சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் போன்றவர்கள் சற்றுத் திணறிய போதிலும் எங்கள் M S. இராசரத்தினம் அவர்கள் அந்த சட்ட தடையை சட்ட சபையில் மாற்றியமைக்க, வழிவகைகளை தேடி அதில் மிகப் பெரிய வெற்றியும் கண்டார். அந்த முயற்சியின் பயனாக அரசாங்கம் மாதகல் பாடசாலையை கையேற்றது. அந்த நிகழ்ச்சி அன்றைய ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் திரு இராச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தினம் அவர்களின் மகத்தான சேவையை உணர வழியமைத்துக் கொடுத்தது.

மிகக் கோலாகலமான முறையில் மாதகல் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு விக்னேஸ்வர வித்தியாசாலை என்று பெயரிடப்பட்டது. இதைத் தொடர்ந்து ஆண்டு தோறும் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏழு எட்டுக்கு மேற்பட்ட பாடசாலைகள் சைவ வித்தியா விருத்திச் சபையினுல் உருவாக காரணமாக விருந்தவர் திரு. M. S. இராசரத்தினம் அவர்களே.

## சைவமும் பௌத்தமும்

திரு. M. S. இராசரத்தினம் அவர்களினுல் ஆரம்பிக்கப் பட்ட சைவ வித்தியா விருத்தி சபைக்குப் பின்தான் பௌத்த மக்களும் தங்களுக்கென ஒரு சபையை அமைத்து செயல்பட்டு பௌத்த மத அபிவிருத்திக்கு உழைக்க முன் வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

## மகத்தான சேவை

திரு. M. S. இராசரத்தினம் அவர்களால் ஆரம்பிக்கப் பட்ட இந்தச் சைவ வித்தியா விருத்திச் சபை, ஒரு ஆசிரிய பயிற்சி கல்லூரி, ஒரு அனுதை விடுதி, உட்பட 88க்கு மேற் பட்ட கனிஷ்ட சிரேஷ்ட உயர்தர பாடசாலைகளை உருவாக்கி, அதன் மூலம் ஆயிரக் கணக்கான மாணவர்களின் உயர்ச்சிக்கு வழிகோலியிருக்கின்றது என்பதை நாம் அறியும்போது இந்த, உயர்ந்த மனிதனின் அரிய சேவைக்கு கைமாறு என்னவாக இருக்க முடியும்? இப்பாடசாலைகள் அமைக்கும் முயற்சியில் அன்னுர் பட்ட துன்பங்களையும் வேதனைகளையும் ஒரு பொருட் டென அவர் என்றும் மதித்தவரல்ல. அவருடன் பணிபுரிந்த அன்றைய நண்பர்களை இன்று கேட்டால் "திரு. M. S. அவர்களுடன் நடக்கவே முடியாது" என்பார்கள். இளைஞர்களான தாங்கள் நாலடி நடந்து முடியுமுன் முதியவரான M. S. எட்டடி நடந்து விடுவார் என்பார்கள்.

நெடுந் தீவுக்கிராமம் இன்றைக்கு 45 வருடங்களுக்கு முன் காடடைந்த பிரதேசமாக விருந்தது அங்கு வாழ்ந்த மக்களோ மனவளமும் பொருள் வளமும் இல்லாத சூழ் நிலையில் மிகவும் வறிய நிலையில் தமது சீவியத்தை கடத்திக் கொண்டி ருந்தனர்) யாழ்ப்பாணத்தில் இருந்து போவதென்ருல் நெடுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் தோணியில் அபாயங்களை கடந்து பத்துப் பன்னிரண்டு மணித்தியாலம் செலவிடவேண்டும், அப்படியான இடத்தில் ஓர் பாடசாலை அமைக்க வேண்டுமென விரும்பினார் திரு. M.S. அவர்கள், கல்வி வாழ்க்கையில் பின்தங்கிய மக்கள் மத்தியில் சென்றால்தான் அந்தப் பிற்பட்ட சமூகத்தின் எதிர்காலம் ஒளி மயமானதாக அமையும் என்று அவர் நினைத்தார். அதனால் நெடுந்தீவில் பள்ளிக்கூடம் அமைக்க முனைந்தார் அந்த ஊர் மக்களிடம் நிதி கேட்க அவருக்கு மனமில்லை வீட்டுக்கு ஒரு ஆடு, கோழி, மாடு கொண்டு தாருங்கள் என்று கேட்டார். அப்படிப் பெற்ற வற்றை விற்று வந்த நிதியோடு, தானும் நிதி போட்டு நெடுந்தீவு மக்களுக்கு ஒரு கல்விக் கூடம் அமைத்துக் கொடுத்தார். அன்று அவர் ஏற்றிய தீபம் இன்று பல அறிஞர் களை உருவாக்க வழியமைத்துக் கொடுத்திருக்கிறது.

## திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும்.

இவரது சொந்த ஊரான வட்டுக்கோட்டையில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு உயர் தர பாடசாலைகளில் ஒன்றில் ஆரம்ப விழாவிக்கு தலைமை தாங்க சேர் பொன் இராமநாதன் அவர்கள் வந்திருந்தார். ஏராளமான சனக்கூட்டம் அன்று அங்கு கூடியிருந்தது. சேர் இராமநாதன் அவர்கள் தமது தலைமையுரையில் திரு. M. S. இராசரத்தினம் அவர்களின் மகத்தான சேவையைப் புகழ்ந்து நெடு நேரம் பேசினார், அந்தப் பாடசாலையை திரு. இராசரத்தினம் அவர்களின் பெயரில் பெயர் சூட்டப்படுவதே பொருத்தமானது என்பதை விளக்கி திரு. இராசரத்தினத்தின் பெயரை அதற்கு சூட்டினார். அங்கி ருந்த திரு. M. S. இராசரத்தினம் அவர்கள் மிக உணர்ச்சி வசப்பட்டவராய் உடனே எழுந்து அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியிலே ஒரு உரை நிகழ்த்தினார், அந்த உரையில் அவர் சொன்னார் ''பெருமை மிகுபாண்டியன், ஆட்சியிலே எல்லா நலமும் பெற்றிருந்த நமது தமிழகம் தமது மத சுதந்திரத்தை சமண சமயத்தின் பிடியில் சிக்க வைத்திருந்த காலத்தில், சமண ஆதிக்கத்தில் இருந்து சைவத்தை மீட்க பெரும் பாடு பட்டு, சைவத்தின் மிகப் பெரிய பெறு பேறுகளை வெளிப் படுத் தியதோடல்லாமல், சைவத்திற்கு அரும் தொண்டாற்றிய சமயக் குரவர்களான, திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் ஆகியோரின் பெயரும், புகழும் ஈர்க்கப்படவேண்டும். அன்னா ரின தேவார திருவாசகங்கள் தமிழ் உள்ளங்களில் திளைக்கவேண் டும். ஆகவே இக்கல்லூரிக்கு திருநாவுக்கரசர் வித்தியாலயம் என்றும் அடுத்தகல்லூரிக்கு திருஞானசம்பந்தர் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பெயர் சூட்டப்பட வேண்டும்'' என வேண்டு கோள் விடுத்தார்.

சற்றேனும் புகழ் விரும்பாத பெருமகனுக திரு. M. S. அவர்கள் இருந்தார் என்பதற்கு இதைவிட உறுதியான உதா ரணம் இருக்கமுடியாது.

காலத்தால் மலியாத காலத்தின் ஏலத்தால் அழியாத பெரும் பேற்றை செய்துவைத்த திரு. இராசரத்தினம் அவர் கள் வட்டுக்கோட்டையின் அடுத்த பாடசாலைக்கு திருஞான சம்பந்த வித்தியாலயம் எனப் பெயரிட்டார்.

## அரசியலும் M. S. சும்

திரு. M. S. அவர்கள் யாழ்ப்பாண சமாஜம் (Jaffna Association) என்ற அரசியல் இயக்கத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் அங்கத்துவம் வகித்து அதன் செயலாளராகவும், கட மையாற்றியிருக்கிறார். அந்த நாட்களில் தமிழ் மக்களின் விடுதலை உணர்வை வெளிப்படுத்தும் ஒரே ஒரு இயக்கமாக இந்தச் சங்கம் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத் தக்க தாகும். இவர் 1929 ம் ஆண்டில் (Donoughmore Commission) டொனர்மோர்க் கொமிஷனின் முன் 9 மணி நேரம் சாட்சி யமளித்தார். தமிழ்ப் பேசும் மக்களின் இருண்ட காலத்தைப் பற்றி வெகுவாக சிந்தித்து செயல் பட்டார். மிகவும் தீர்க்க தரிசனமான பார்வையில் இன்று தமிழினம் படுகின்ற அவல நிலையை உணர்ந்து அதற்குப் பரிகாரம் காணவேண்டுமென்று அன்றே முனைந்தார். ஈழத்தின் இரு பெரும் சமூகங்கள் ஒற்று மையுடன் வாழ ஒரு கூட்டாட்சி அமைப்புத்தான் சரிவரும் என்பதை வலியுறுத்தி தனது நீண்ட உரையை அங்கு நிகழ்த் தினர்.

## காந்தியுடன் M. S.

1927 ம் ஆண்டு சத்தியத்தின் தவப்பேறும் மகாத்மா காந்தி இலங்கைக்கு வருகை தந்தார். அன்னாரை வரவேற்கும் பெரும் பேறு பெற்ற பெருமகன் திரு. M. S. அவர்களே. யாழ்ப்பாணத்தில் அண்ணல் காந்தியை வரவேற்க அமைத்த குழுவில் முக்கிய பொறுப்பாளராக விருந்து, பெரும் தலைவர் காந்தியை வரவழைத்து யாழ்ப்பாண மைதானத்தில் கௌர வித்தார்.

## பத்திரிகையாளர்

இந்து சாதனம் என்ற தமிழ்ப்பிரதியை நடத்திய தோடு, Hindu Organ என்ற ஆங்கில பத்திரிகைக்கும் ஆசிரிய ராக விருந்து, கடல் கடந்த நாடெல்லாம் சைவத்தின் பெரும் பேற்றை அள்ளிஇறைத்தார். ''மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்'' என்ற கொள்கையைவாயளவில் மட்டுமல்ல செயலளவிலும் செய்து காட்டியவர் திரு. M. S; அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலும், முடிவும்

''அரியவற்றில் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணி தமராகக் கொளல்'' என்பது வள்ளுவன் வாக்கு. இந்த அடிப்படையில் அரிய பல செய்த ஒரு பெரியவரை நாம் காலம் கடந்துதான் சிந்திக்கிறோம். என்றாலும் சந்தணத் தின் வாசத்திற்கு என்றும் விளம்பரம் தேவையில்லை.

திரு. M. S. இராசரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணத்தின் இன்றைய சுதேச எழிச்சிக்கு அன்று வித்திட்டவர். இன்று நாம் முழக்கமிடும் சைவ உணர்சிக்கும் தமிழார்வத்திற்கும் மிக முந்தியே அடிகோலி வைத்தவர்.

கட்டையான தோற்றத்தோடும், கனிவு கலந்த பார்வை யோடும், அறிவொளி வீசும் கண்களோடும், அனுபவத்தைக் காட்டும் நடையோடும், செயல்பட்ட திரு. M. S. இராசரத்தி னம் அவர்கள் இன்று நம்மிடமில்லை. ஆனால் அவர் விதைத் திட்ட நல்ல உணர்வுகள், நெறிகள், நமது இனத்திடம் என் றும் தழைத்தோங்க வேண்டும். தமது மதத்திலும் இனத்தி லும் அவர் கொண்டுள்ள மாறாத அன்புள்ளம் நம்ஒவ்வொரு வருக்கும் ஏற்படவேண்டும். அதற்கானவற்றை நாம் செய்தி டல் வேண்டும். தனது வாழ்க்கையின் அந்நிய காலத்தை மிக அமைதியாகக் கழித்து 1957ம் ஆண்டு பங்குனி மாதம் 14ம் திகதி இவ்வுலகை நீத்தார்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பிறகு இந்த நாட்டின் ஒவ் வொரு உணர்ச்சியுள்ள மனிதனும் தனது சுயஉரிமை உணர்வை உணர்ந்து, செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு காலத் தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், இன்றைக்கு 50 ஆண்டு களுக்கு முன், நமது சுய உணர்வின் சின்னமாகவிருந்த ஒரு பெருமகனை நாம் நினைவு கூர்வதில் பெருமைப்பட வேண்டும்.

எந்த ஒரு இனமும் தனது முன்னைய வரலாற்றை பண் டைய இலக்கியத்தை, சரித்திரத்தை, அறிஞர்களை நினைவு கூர்ந்து கௌரவிக்கா விட்டால் அந்த இனம் விடுதலையடைய முடியாது.

விடுதலை வேட்கை கொண்டு அலையும் இன்றைய ஈழத் தமிழினம் சைவத்துக்கும் தமிழிற்கும் அரும் தொண்டாற்றி சாதனை பல புரிந்த திரு. M. S. இராசரத்தினம் அவர்களின் நினைவுகொண்டு செயல்பட முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிவு;
மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட்
161, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org